255—

தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறார்களுக்கான நல நிதியை தென்னாற்காடு மாவட்டத்தில் தொடங்குதல்.

*23710—திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறார்களுக்கான நல நிதியை தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக இந்தத் தொழிலாளர் நல நிதி எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது என்பதனை அறிய விரும்புகிறேன். தமிழ்நாட்டில் எத்தனை மாவட்டங்களில் இதுபோன்ற நலத் திட்டங்கள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் துவங்கிய மாவட்டங்களில் இதுபோன்ற நலத் திட்டங்களை எப்பொழுது அறிவிப்பார்கள்? அதனுடைய சாத்தியக்கூறு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டிருக்கிற மூலக் கேள்வி, தென்னாற்காடு மாவட்டத்தில், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றனவா; அங்கு சிறுவர்களுக்கான வாரியம் அமைக்கப்படுமா என்பதுதான். ஆனால், அவர் வேறு வேறு கேள்விகளைக் கேட்பதால், அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால், அதற்குத் தனியாக பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது நல நிதி என்று கேள்வி போட்டுவிட்டு, என்னென்ன திட்டங்கள் என்று இப்போது கேட்பதால்தான், தனிக் கேள்வி போடுமாறு அமைச்சர் சொல்கிறார்.

வினா எண் 256, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

256—

நாட்ராம்பள்ளி அம்பலூரில் கூட்டுறவுத் துறையில் பிரதம நிலவள வங்கி தொடங்குதல்.

* **21916**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், நாட்ராம்பள்ளி ஒன்றியம், அம்பலூரில் கூட்டுறவுத் துறையில் பிரதம நிலவள வங்கி (L.D.Bank) ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், நாட்ராம்பள்ளி ஒன்றியம், அம்பலூரில் ஒரு புதிய கூட்டுறவு நிலவள வங்கியைத் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நலிவுற்ற விவசாயிகள் மற்றும் நலிந்துள்ள, பின்தங்கியுள்ள மக்கள் நிறைந்த பகுதியாக உள்ள நாட்ராம்பள்ளி ஒன்றியம், ஒருகாலத்தில் தீவிரவாதிகளின் வளர்ச்சிக்கு இடம் கொடுத்துவிட்டது. அதனை முற்றிலும் ஒழித்துக்கட்டிய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், அங்கு ஒரு நிலவள வங்கியைத் துவக்க ஆவன செய்வார்களா என்பதையும், வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை நிலவள வங்கிகள் உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில், ஒரு நிலவள வங்கியைத் துவக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குப் பல்வேறுபட்ட நிபந்தனைகள் உள்ளன. 'நாபார்டு' நிறுவனத்திடமிருந்து அனுமதி பெறவேண்டும்.